DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 56/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : திருமதி.கமலாதேவி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th November 2025.

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவில் அனைத்துமகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2015 ம் தேதி உதவி ஆய்வாளராக சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது சண்முகத்தாய் என்பவர் நிலையம் ஆஜராகி புகார் மனுவை காலை 9.00 மணிக்கு பெற்று அதன் தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.37/2015 ச/பி. 494, 506(2) இதச படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி **முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27.02.2015 ம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கின் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சண்முகத்தாய், மணிமாறன், ராஜேஸ், முருகன், கிருஷ்ணன், மாடசாமி,

ஆவுடையப்பன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். இவ்வழக்கின் எதிரி சமுத்திரக்கனியை 28.02.2015 ம் தேதி காலை 10.00 மணிக்கு சங்கரன்கோவில் பஸ்ஸ்டாண்டில் வைத்து கைது செய்து 10.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றக்காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் 29.03.2015 ம் தேதி நான் மருத்துவவிடுப்பில் சென்றதால் வழக்கு கோப்பினை நிலையப்பொறுப்பில் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**